District Munsif Cum Judicial Magistrate Court, Radhapuram. 08.06.2026

**Judicial Form No-53**

**DEPOSITION OF WITNESS IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RADHAPURAM.**

**Case No. CC - 39/2024**

**Prosecution Witness –PW - 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சகாதேவன் | Nationality: | இந்தியன் |
| Father's Name : | குட்டிகண் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village: | முகிலன்குடியிருப்பு | Religion: | இந்து |
| Taluk: | அகஸ்தீஸ்வரம் | Age: | 52 |

**( Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 2069 r/w 35,36 of Criminal rules of practice 2020.08.06.2026**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 08 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது இராதாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் நிலைய குற்ற எண்.14/2023 வழக்கின் உள்ள முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம் மற்றும் புலன்விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஸ்டீபன்.ஜி.ஆர்.ஜோஸ் ஆகியோர்கள் வேறு காவல்நிலையத்தில் பணி புரிவதால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாலும், அவர்கள் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 25.01.2023 ம் தேதி 11.30 மணிக்கு இராதாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம் என்பவர் நிலைய பொறுப்பில்

இருந்த போது சிவசுப்பிரமணியபுரம் , தனக்கர்குளம் நியாய விலைக்கடையைச் சேர்ந்த நியாய விலைக் கடை விற்பனையாளர் கனகா பிளாரன்ஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்றுள்ளார். **புகார் மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 14/2023 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 353, 354, of IPC and 3 of TNPPDL act சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து கனம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக உயர் அதிகாரியின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3) விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 25.01.2023 ம் தேதி 12.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆசீர்வாதம், விக்டர்ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** பின்னர் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரி அனைவரும் திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டார்.

5) பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 மற்றும் வழக்கு பதிவு செய்த பதிவு செய்த உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

(6) பின்னர் வழக்கின் விசாரணை அதிகாரி 20.11.2023 ஆம் தேதி வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 353, 354, of IPC and 3 of TNPPDL act யிலிருந்து 294(b), 353, 354, of IPC ஆக வழக்கு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(7) வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் 294(b), 353, 354, of IPC ஆக குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) நீங்கள் சொன்ன தேதியிலும், சொன்ன நேரத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வில்லை என்றாலும், வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை நேரில் விசாரிக்கவில்லை என்றாலும், இந்த விசாரணை ஒருதலைபட்சமானது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.08 18:18:15 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Radhapuram.